மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, උතුරු පළාත
Provincial Department of Education, Northern Province

# தரம் -03 மாணவர்களுக்கான நிலையறி பரீட்சை -2021

**பாடம் :- சைவநெறி** **நேரம் -1.30 மணித்தியாலம்**

**மாணவர் பெயர்:-** ............................................ **பாடசாலை:-** ............................................

01. சரியான விடையின் கீழ் கோடிடுக.

1. முதல் வணக்கத்திற்கு உரியவர் யார்?
   1. பிள்ளையார் 2. சிவன் 3. முருகன்
2. எங்கள் முழுமுதற் கடவுள் யார்?
   1. விஷ்ணு 2. பிரம்மா 3. சிவபெருமான்
3. சிவபெருமானின் சக்தியாக விளங்குபவர் யார்?
   1. உமாதேவியார் 2. சரஸ்வதி 3. துர்க்கை
4. மக்களுக்கு பல துன்பங்கள் செய்த அசுரன் யார்?
   1. கஜபாகு 2. நரகாசுரன் 3. சூரபத்மன்
5. “**அன்னம் பாலிக்கும்…..**” என்னும் தேவாரத்தைப் பாடியவர் யார்?
   1. திருஞானசம்பந்தர் 2. திருநாவுக்கரசர் 3. சுந்தரர்
6. இறைவனிடம் அரிய வரங்களைப் பெற்றவன் யார்?
   1. சூரபத்மன் 2. அரக்கன் 3. மன்னன்
7. தீப்பொறிகளில் இருந்து தோன்றிய குழந்தை யார்?
   1. பிள்ளையார் 2. வைரவர் 3. முருகன்
8. பிள்ளையாரின் வாகனம் எது?
   1. மயில் 2. எலி 3. பசு
9. சிவபெருமானைத் தோழராகக் கொண்டு வழிபட்டவர் யார்?
   1. திருஞானசம்பந்தர்
   2. சுந்தரமூர்த்தி நாயனார்
   3. திருநாவுக்கரசர்
10. சிவபெருமானைக் குறிக்கும் அடையாளங்கள் எவை?
    1. சிவசின்னங்கள் 2. தேவாரம் 3. சூலம்
11. பாலுக்கு அழுத பாலகன் யார்?
    1. உபமன்யு 2. அசுரன் 3. முருகன்
12. நம் முன்னோர்கள் எதனை தெய்வாம்சம் உடையதாகப் போற்றினார்கள்?
    1. பசுவை 2. விளக்கை 3. மரத்தை

13. நரகாசுரன் என்னும் அசுரனை அழித்தவர் யார்?
    1. கிருஷ்ணபகவான் 2. சிவபெருமான் 3. வைரவர்
14. திருக்கோணேச்சரத்தில் வீற்றிருக்கும் இறைவன் பெயர் என்ன?
    1. கேதீஸ்வரர் 2. கோணேஸ்வரர் 3. கதிர்காமர்
15. சிவபெருமானின் நெற்றிக் கண்ணில் இருந்து தோன்றிய தீப்பொறிகள் எங்கே விழுந்தன?
    1. சரவணப்பொய்கையில் 2. குளத்தில் 3. கிணற்றில்
16. திருக்கோணேச்சரத்தின் தீர்த்தத்தின் பெயர் என்ன?
    1. பாலாவி 2. பாவநாசம் 3. மாணிக்ககங்கை
17. சிவபெருமான் சூரபத்மனை அடக்க யாரை அனுப்பினார்?
    1. முருகப்பெருமானை 2. பிள்ளையாரை 3. வைரவரை
18. முருகப் பெருமானின் கொடி எது?
    1. கோழி 2. சேவல் 3. மயில்
19. ஆனை முகனுக்கு துதிக்கையோடு சேர்த்து எத்தனை கரங்கள் உண்டு?
    1. 05 2. 04 3. 06
20. விளக்கை அணையாமற் காத்த புண்ணியம் யாருக்கு கிட்டியது?
    1. பூனை 2. பசு 3. எலி

(2x20=40புள்ளி)

02. தொடர்புபடுத்துக.

| | |
|---|---|
| 1. ஆனைமுகனின் தந்தம் | அன்பே வடிவானவர் |
| 2. இறைவன் | பிறைச்சந்திரன் போன்றது |
| 3. இலட்சுமியாகப் போற்றுவது | நமிநந்தியடிகள் |
| 4. தீமைகளிலிருந்து எம்மைப் பாதுகாப்பது | விளக்கை |
| 5. சைவநாயன்மார்களுள் ஒருவர் | சிவசின்னங்கள் |

(2x5=10புள்ளி)

03. கீறிட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து எழுதுக?

| | | | | |
|---|---|---|---|---|
| கோணேசர் | சுந்தரர் | செங்கட்டிகளை | தீபாவளி | சூரசங்காரம் |

1. சிவபெருமான் ..................................... பொன்கட்டிகளாக மாற்றி அருளினார்.

2. கந்தசஷ்டி விரதத்தின் இறுதி நாளன்று ஆலயங்களில் ............................... பெருவிழாவாக நடைபெறுகின்றது.

3. கோணமாமலை உச்சியிலே அழகிய ..................................... கோயில் அமைந்திருக்கின்றது.

4. ..................................... என்றால் சிறுவர்களுக்கு ஒரே கொண்டாட்டம்.

5. ..................................... **'தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்'** எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடியருளினார்.

(3x5=15புள்ளி)

04. சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (**X**) எனவும் அடையாளம் இடுக.

1. சிவபெருமானை நந்தி என்றும் அழைப்பார். (    )

2. அம்மா, கோயிலுக்கு கொடுப்பதற்காக மாலை கட்டினார். (    )

3. விளக்குகள் உலகின் அக இருளைப் போக்குகின்றன. (    )

4. படைத்த உணவு அப்படியே இருப்பதைக் கண்டு நம்பிக்கு சிரிப்பு வந்தது. (    )

5. சுந்தரமூர்த்தி நாயனார் பரவையாரைத் திருமணம் செய்தார். (    )

(2x5=10புள்ளி)

05. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

1. நரகாசுரன் அழிந்த தினத்தில் கொண்டாடப்படும் பண்டிகை எது?

.......................................................................................................................................

2. நம்பி பிள்ளையாருக்கு படைத்த உணவுகள் எவை?

.......................................................................................................................................

3. சிவசின்னங்கள் அணிவதால் உண்டாகும் நன்மைகள் எவை?

.......................................................................................................................................

4. சைவத்திருமுறைகளைத் தொகுத்துத்தந்த பெருமைக்குரியர் யார்?

.......................................................................................................................................

5. திருவிளக்கிடும் திருப்பணி புரிந்து திருவருள் பெற்ற நாயனார் யார்?

.......................................................................................................................................

(3x5=15புள்ளி)

07. பின்வரும் தேவாரத்தைப் பூர்த்தி செய்து எழுதுக

இல்லக ......................................... இருள் கெடுப்பது

சொல்லக விளக்கது .................................... உள்ளது

.......................................... விளக்கது பலரும் காண்பது

.......................................... விளக்கது ....................................

(2x5=10புள்ளி)